நமக்கு நாமே திட்டம் – 2008–09 மதுரை மாவட்டம் – திருமங்கலத்தில் உள்ள ஜோதிதர்மன் உயர்நிலைப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்ட அனுமதி கோரியது சிறப்பு அனுமதி வழங்கப்படுகிறது.

**கடிதம் (1D) எண். 220, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி1) துறை, நாள் 21.4.2009.**

ஐயா,

பொருள்: நமக்கு நாமே திட்டம் – 2008–09 மதுரை மாவட்டம் – திருமங்கலத்தில் உள்ள ஜோதிதர்மன் உயர்நிலைப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்ட அனுமதி கோரியது சிறப்பு அனுமதி வழங்கப்படுகிறது.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.87 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 5.6.2008.
2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.68932/08/NEDM-1, நாள் 27.2.2009.

* * * * * *

மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் உள்ள ஜோதி தர்மன் உயர்நிலைப்பள்ளிக்கு, நமக்கு நாமே திட்டம் 2008–09ன் கீழ் சுற்றுச்சுவர் கட்டுவது குறித்த கருத்துரு வரப்பெற்றுள்ளதாக மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் தெரிவித்துள்ளதாகவும், மேலும், இப்பள்ளி 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மற்றும் 100 சதவீதம் தமிழ்வழி பயிற்றுவிக்கும் பள்ளி என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். அரசு ஆணை (நிலை) எண்.87 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நாள் 5.6.2008ல் 100 சதவீதம் அரசு நிதி உதவிபெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ்வழிக் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணியை எடுத்துச் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் ஆனால் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைப்பது குறித்து ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றும் எனவே ஜோதி தர்மன் உயர்நிலைப்பள்ளிக்கு நமக்கு நாமே திட்டம் 2008–09ன் கீழ் சுற்றுச்சுவர் கட்டுவது குறித்த அரசின் தெளிவுரையை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கோரியுள்ளார்.

2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கோரிக்கையை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தது. அதன்படி மதுரை, திருமங்கலம் ஜோதி தர்மன் உயர்நிலைப்பள்ளியானது 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ்வழிக்கல்வி பயிற்றுவிக்கும் பள்ளியாக இருப்பதாலும் அப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணி அத்தியாவசியம் என்பதாலும், மாணவர்களின் பாதுகாப்பிற்கு முக்கியமானது என்பதாலும், நமக்கு நாமே திட்டம் 2008–09–ன் கீழ் சிறப்பினமாக எடுத்துச் செய்யலாம் என்று அரசு முடிவு செய்து, மதுரை, திருமங்கலம் ஜோதி தர்மன் உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணியை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய மதுரை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு சிறப்பு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.